

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (1.3.2026) தனது 73வது பிறந்தநாளையொட்டி சென்னை, மெரினா கடற்கரையில் அமைந்துள்ள பேரறிஞர் அண்ணா அவர்களின் நினைவிடத்தில் மலர்தூவி மரியாதை செலுத்தினார். உடன், கழக மக்களவை குழுத் தலைவர் டி.ஆர். பாலு, துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (1.3.2026) தனது 73வது பிறந்தநாளையொட்டி சென்னை, மெரினா கடற்கரையில் அமைந்துள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நினைவிடத்தில் மலர்தூவி மரியாதை செலுத்தினார். உடன், கழக மக்களவை குழுத் தலைவர் டி.ஆர். பாலு, துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (1.3.2026) தனது 73வது பிறந்தநாளையொட்டி சென்னை, மெரினா கடற்கரையில் அமைந்துள்ள பேரறிஞர் அண்ணா மற்றும் முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோர் நினைவிடங்களில் மலர்தூவி மரியாதை செலுத்திய பிறகு, அங்கு பணிபுரியும் பணியாளர்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். உடன், கழக மக்களவை குழுத் தலைவர் டி.ஆர். பாலு, துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் உள்ளனர்.

### நிவேதா எம் முருகன் எம்.எல்.ஏ., தலைமை ! பி.எம்.அன்பழகன் வரவேற்புரை!

## பூம்புகார் சட்டமன்றத் தொகுதியில் 'தமிழ்நாடு தலைகுனியாது' சாதனை விளக்கப் பொதுக்கூட்டம்!

### அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன், கான்ஸ்டன்டைன் ரவீந்திரன் சிறப்புரை!

### குத்தாலம் பி.கல்யாணம், பி.எம். ஸ்ரீதர், ஆர்.அருள் செல்வம் பங்கேற்பு!

மயிலாடுதுறை மார்ச் 2–

மயிலாடுதுறை மாவட்டம், செம்பனார்கோயில்செல்வம் சதுக்கத்தில் பி. மதிவாணன் நினைவரங்கத்தில் பூம்புகார் சட்டமன்றத் தொகுதி தமிழ்நாடு தலைகுனியாது திராவிட மாடல அரசின் சாதனை விளக்கப் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

பொதுக்கூட்டத்திற்கு மயிலாடுதுறை மாவட்ட கழக செயலாளரும், பூம்புகார் சட்டமன்ற உறுப்பினர் நிவேதா எம். முருகன் தலைமை தாங்கினார். செம்பனார்கோயில் வடக்கு ஒன்றிய கழக செயலாளர் பி.எம்.அன்பழகன் வரவேற்றார். தகவல் தொழில்நுட்ப அணி மாநில துணைச் செயலாளர் பி.எம்.ஸ்ரீதர், ஒன்றிய கழக செயலாளர் செம்னார்கோயில் தெற்கு எம்.அப்துல் மாலிக், செம்பனார்கோயில் மத்தியம் அமிர்த.விஜயகுமார், குத்தாலம் மேற்கு ஏ.ஆர்.ராஜா, குத்தாலம் வடக்கு கு. வைத்தியநாதன், சீர்காழி கிழக்கு பஞ்சு.குமார், தரங்கம்பாடி பேரூர் செயலாளர் எஸ். கே.முத்துராஜா, பொதுக்குழு, உறுப்பினர்கள் ஜெ.கபிலன், நத்தம் ஏ. வின்சென்ட், ஹர்ஷத், தரங்கம்பாடி பேரூராட்சி தலைவர் சுகுணா சங்கரி குமரவேல், பரசலூர் ஊராட்சி மன்ற முன்னாள் தலைவர் த.சண்முகம், மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு துணை அமைப்பாளர் என.ஹிட்லர், கிளைக் கழக செயலாளர்கள் கே.பாலையா, கோ.கந்தசாமி, ஜே. சரவணன் ஏ. நாகராஜன், எஸ்.நாகராஜன், என். காமராஜ், டி.ரமேஷ், எஸ்.பாண்டியன், கே.சிலம்பரசன், எஸ்.ராமலிங்கம், ஆர்.செந்தில், எஸ்.சசி, மற்றும் ஒன்றிய பிரதிகள் முன்னிலை வைத்தனர்.

கூட்டத்தில் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன், தலைமை கழக செய்தி தொடர்பாளர் கான்ஸ்டன்டைன் ரவீந்திரன், கழக உயர்நிலை செயல்திட்டகுழு உறுப்பினர் குத்தாலம் பி.கல்யாணம் ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள்.

கூட்டத்தில் மாநில விவசாய அணி இணைச் செயலாளர் ஆர். அருள்செல்வம், கழக கொள்கை பரப்பு துணை செயலாளர் குத்தாலம் க.அன்பழகன், மாநில விவசாய தொழிலாளர் அணி இணை செயலாளர் ஜெக.வீரபாண்டியன், சட்டமன்ற முன்னாள் உறுப்பினர்கள் ஏ.சி.என் .விஜயபாலன், எம். எம். சித்திக், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் ஜி.என். ரவி, முத்து. மகேந்திரன், மாவட்ட கழக துணை செயலாளர்கள் மு.ஞானவேலன், கண்ணகி பன்னீர், சீர்காழி மேற்கு ஒன்றிய கழக செயலாளர் ஏ.ஜி. ஜெ.பிரபாகர், சீர்காழி நகர கழக செயலாளர் ம.சுப்பராயன், பொதுக்குழு உறுப்பினர்கள் சுபா. நெடுஞ்செழியன், பி.சிவதாஸ், முன்னாள் ஒன்றிய குழு தலைவர்கள் பி.பாஸ்கர், தியாக. விஜயேஸ்வரன், கே. மகேந்திரன், மருத்துவர் அணி எஸ்.வீரபாண்டியன், கோசி.மதி. திருமாவளவன், ஜே .,மாவட்ட சார்பு அணிகளின் அமைப்பாளர்கள் காளி தேசப்பன் ஆர்.எஸ். ஸ்ரீதர், வி.எஸ்.பிரபாகர், செம்பனார்கோவில் வடக்கு ஒன்றிய கழக நிர்வாகிகள் இரா.சுப்பையன், எஸ். தென்னரசன், ஜி.ஆர்.பிரபாகரன், கே.சத்யராஜ், அமுதா.அன்பழகன், ஏ சரவணன் பி.கௌதம், செம்பனாரகோயில் தெற்கு. மத்திய ஒன்றிய நிர்வாகிகள் க.இளங்கோவன், கே. எஸ்.எஸ்.கருணாநிதி, கே.பி. ராஜா, எஸ்.சிவகுமார், கா.இளங்கோவன், செல்லம்மாள் பன்னீர் செல்வம், ஏ. ரங்கராஜ், எஸ். கோபால், எஸ்.சிவக்குமார், கோ தட்சிணாமூர்த்தி, பா.கணேசன், கா.சங்கர், சாந்தி வேல்முருகன், ஜி.கருணாநிதி, தரங்கம்பாடி பேரூர் நிர்வாகிகள் த.மதியழகன், எஸ்.பால்ராஜ், அம்பிகா பிரபு, பி. கண்ணதாசன், எம்.வீரமணி, முக மதுஇக்பால் ஜி.செந்தில்குமார் மற்றும் திருக்கடையூர் செந்தில்குமார் மற்றும் ஒன்றிய, நகர, பேரூர், கிளை, வார்டு கழக நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புகளின் முன்னாள் பிரதிநிதிகள் பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள், சார்ப அணிகளின் நிர்வாகிகள் உள்ளிட்டோர் நேரமா கலந்து கொண்டனர் முடிவில் செம்பனார்கோவில் வடக்கு ஒன்றிய துணை செயலாளர் ஜி. நெடுஞ்செழியன் நன்றி கூறினார்.

---

## சமரசமும் சமத்துவமும்தான் ஆன்மீகப் பாதையாக இருக்கமுடியும்!

# மக்களைப் பிரிக்க நினைக்கும் கும்பலைப் புறக்கணிப்பீர்!

## கிராமக் கோயில் பூசாரிகள் மாநாட்டில் – முதல்வர் மு.க.ஸ்டாலின் வேண்டுகோள்!

**சென்னை, மார்ச் 2-**

**கிராமக் கோயில் பூசாரிகள் மாநாட்டில் பங்கேற்று உரையாற்றிய முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் "சமரசமும் சமத்துவமும்தான் ஆன்மீகப் பாதையாக இருக்கமுடியும்" என்றும் மக்களைப் பிரிக்க நினைக்கும் கும்பலைப் புறக்கணிப்பீர்" என்றும் வேண்டுகோள் விடுத்தார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (28.2.2026) சென்னை, மயிலாப்பூர், ஆர்.கே. மடம் சாலை, கபாலீசுவரர் திடலில் நடைபெற்ற கிராமக் கோயில் பூசாரிகள் மாநாட்டில் கலந்து கொண்டு ஆற்றிய உரை வருமாறு:-

உங்களையெல்லாம் ஒருசேர பார்க்கும்போது, மனதில் பெரு மகிழ்ச்சி பெருக்கெடுக்கின்றது. நம்முடைய திராவிட மாடல் ஆட்சிப் பற்றி நாம் சொல்வது எல்லாருக்கும் எல்லாம் அதற்கு எடுத்துக்காட்டுதான் இந்த விழா!

"எல்லாருக்கும் எல்லாம்" என்று நாம் சொல்வது, வாய் வார்த்தைக்காக அல்ல; சொற்களில் சொல்வதை, செயலில் நிரூபிக்கிறோம் என்பதற்கான அடையாளம்தான் இந்த மாநாடு!

உண்மையான ஆன்மீக அன்பர்களும், இறை பற்றாளர்களும் விரும்பக்கூடிய அரசுதான், திராவிட மாடல் அரசு! இந்த மாநாட்டைப் பார்க்கும்போது, பலருக்கு வியப்பாக இருக்கலாம்; ஏன், சிலருக்கு எரிச்சல்கூட வரலாம். கிராம கோயில்களில் பணியாற்றுகின்ற கிராமப் பூசாரிகளான நீங்களும் இந்த சமுதாயத்தில் ஒரு அங்கம்தான். உங்களுடைய வாழ்விலும், விடியல் ஏற்படவேண்டும் என்ற எண்ணத்தில்தான், நம்முடைய அரசு தொடர்ந்து செயலாற்றி வருகிறது. இன்னும் சொல்லப்போனால், இந்த மண்ணில் வாழுகின்ற பெரும்பான்மையான மக்களுடைய உரிமைகளை நிலைநிறுத்திய திராவிட இயக்கத்தின் உணர்வை, நம்முடைய அரசில்தான் நிலைநாட்டியிருக்கிறோம்.

ஒருகாலத்தில், கோயில் இருக்கின்ற தெருக்களில் கூட பலரால் நுழைய முடியாத நிலைதான் இருந்தது; அதை மாற்றி, இன்றைக்கு கோயில்களுக்குள்ளே அனைத்து மக்களும் வரலாம்; அனைத்துச் சாதியினரும் அர்ச்சகராகலாம்; அன்னைத் தமிழில் அர்ச்சனை செய்யலாம் என்று மாற்றியிருக்கிறோம். இந்த மாற்றம்தான், நாம் விரும்புகின்ற சமூக முன்னேற்றம்! இதைத்தான் உண்மையான இறைப் பற்றாளர்களும் விரும்புவார்கள். இறை நம்பிக்கையை பொறுத்தவரைக்கும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் நிலைப்பாடு என்பது, "ஒன்றே குலம் ஒருவனே தேவன்" என்று திருமூலர் சொன்ன வழிதான் என்று பேரறிஞர் அண்ணா சொல்லியிருக்கிறார்.

### அனைவரது உரிமைகளையும் பாதுகாக்கும் அறநிலையத் துறை!

அதேபோலதான், தலைவர் கலைஞர் அவர்களும், "கோயில்கள் கூடாது என்பதல்ல; அவை கொடியவர்களின் கூடாரமாக ஆகிவிடக் கூடாது" என்று சொல்லியிருக்கிறார். அந்த வழியில்தான், அனைவருக்கும் மதிப்பளிக்கும், அனைவரது மாண்பையும் காக்கும், அனைவரது உரிமைகளையும் பாதுகாக்கும் துறையாக, நம்முடைய அறநிலையத்துறை செயல்பட்டு வருகிறது.

### சிறப்பாக, வேகமாகச் செயல்படுகிறார் சேகர்பாபு!

இன்னும் சொல்லப்போனால், கடந்த ஆட்சிக் காலங்களில், அறநிலையத் துறை அமைச்சர் யார் என்பதுகூட மக்களுக்கு நினைவில் இருக்காது. ஆனால், இப்போது தமிழ்நாட்டில் இருக்கின்ற யாரை கேட்டாலும், நம்முடைய சேகர்பாபு அவர்களின் பெயரை பளிச்சென்று சொல்வார்கள். அந்தளவுக்கு நாள்தோறும் ஏதாவது ஒரு விழா, ஒரு கோயிலை புதுப்பிப்பது என்று அவர் செய்து கொண்டே இருக்கிறார். இன்னும் பெருமையாக சொல்ல வேண்டும் என்றால், நான் அதிகமாக் எந்த துறையினுடைய நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டீர்கள் என்று யாராவது கேட்டால், இந்து சமய அறநிலையத்துறை நிகழ்ச்சிகள் என்று உடனே பதில் சொல்லிவிடலாம். அந்தளவுக்கு, சிறப்பாக, வேகமாக செயல்படுகிறார் நம்முடைய சேகர்பாபு அவர்கள்!

### அறநிலையத் துறையின் சாதனைகள்!

அறநிலையத் துறை சார்பில் செய்யப்பட்டிருக்கின்ற சாதனைகளின் சில புள்ளிவிவரங்களை இப்போது தலைப்புச் செய்தியாக நான் சொல்ல விரும்புகிறேன்.

தமிழ்நாட்டு வரலாற்றிலேயே இல்லாத அளவுக்கு, நம்முடைய அரசு பொறுப்பேற்ற ஆயிரத்து 759 நாட்களில், 4 ஆயிரத்து 335



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சென்னை, மயிலாப்பூரில் நேற்று முன்தினம் (28.02.20126) இந்து சமய அறநிலையத்துறை சார்பில் நடைபெற்ற கிராமக் கோயில் பூசாரிகள் மாநாட்டில் கலந்துகொண்டு, பூசாரிகளுக்கு பூசை உபகரணங்களை வழங்கினார். இம்மாநாட்டில், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, குன்றக்குடி ஆதீனம் தவத்திரு பொன்னம்பல அடிகளார், மயிலம் பொம்மபுர ஆதீனம் தவத்திரு சிவஞானபாலய சுவாமிகள், திருபெரும்புதூர் ஜீயர் தவத்திரு இராமனுஜ எம்பார் சுவாமிகள், மேயர் திருமதி ஆர்.பிரியா, சட்டமன்ற உறுப்பினர் த.வேலு மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

கோயில்களில் திருப்பணிகள் மேற்கொண்டு குடமுழுக்கு நடத்தப்பட்டிருக்கிறது.

அனைத்து சாதி அர்ச்சகர் திட்டத்தின் கீழ், 29 அர்ச்சகர்களை பணி நியமனம் செய்திருக்கிறோம்.

12 பெண் ஓதுவார்கள் உட்பட 46 ஓதுவார்களை பணி நியமனம் செய்திருக்கிறோம்.

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலமாக, இந்தத் துறையில், 813 நபர்களுக்குப் பணி நியமன ஆணைகள் வழங்கப்பட்டிருக்கிறது.

நீண்ட ஆண்டுகளாக நிலுவையில் இருந்த 946 அலுவலர்களின் பதவி உயர்வு வழங்கப்பட்டிருக்கிறது.

அர்ச்சகர்கள் மற்றும் பணியாளர்களின் ஓய்வூதியம் 5 ஆயிரம் ரூபாயாகவும், அவர்களது குடும்ப ஓய்வூதியம் 2 ஆயிரத்து 500 ரூபாயாகவும் உயர்த்தி வழங்கி இருக்கிறோம்.

19 ஆயிரம் ஒரு கால பூசை திட்ட திருக்கோயில்கள் அர்ச்சகர்களுக்கு மாதந்தோறும் ஊக்க தொகையாக ஆயிரத்து 500 ரூபாயை வழங்கிக் கொண்டு வருகிறோம்.

221 கோடி ரூபாய் மதிப்பீட்டில், 616 குடியிருப்புகளை கட்டித் தந்திருக்கிறோம்.

பணிக்காலத்தில், இயற்கை எய்திய திருக்கோயில் பணியாளர்களின் குடும்பத்தினருக்கு, குடும்ப நல நிதியாக 4 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டிருக்கிறது.

திருக்கோயில் அர்ச்சகர்கள் மற்றும் பணியாளர்களுக்கு ஆண்டுக்கு ஒருமுறை கட்டணமில்லா முழு உடல் பரிசோதனை திட்டமும் செயல்படுத்தப்பட்டிருக்கிறது.

கிராம கோயில் பூசாரிகளுக்கான ஓய்வூதியம் 4 ஆயிரம் ரூபாயாக உயர்த்தி வழங்கப்பட்டிருக்கிறது.

கோயில் சொத்துகளை மீட்கவேண்டும் என பெருமுயற்சி எடுத்து, அதிலும் சாதனை படைத்திருக்கிறோம்.

8 ஆயிரத்து 440 கோடி ரூபாய் மதிப்பிலான 8 ஆயிரத்து 140 ஏக்கர் நிலங்களை மீட்டிருக்கிறோம்.

இப்போது, நான் சொன்ன சாதனைகள் எல்லாம் மிகவும் குறைவுதான். பெரிய சாதனை புத்தகத்தின் சில பக்கங்கள்தான்! ஏராளமான சாதனைகள் இருக்கிறது.

தொடர்ச்சி 3–ஆம் பக்கம்